<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 210/2015**

பெயர்:**ராஜீ** நாள்: 09.10.2025

வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – ராஜீ - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11:50</u>

இந்த நீதிமன்றத்தில் ஏற்கனவே இந்த வழக்கு சம்மந்தமாக நான் சாட்சி கூற வந்திருந்தேனா என்றால், ஆமாம். இந்த வழக்கின் பிரதிவாதி மகேஸ்வரிக்காக சாட்சி கூற வந்துள்ளேன் என்றால், இல்லை வாதி கோவிலுக்காக வந்திருக்கிறேன். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். கோவில் நிலம் எங்களுக்கு சொந்தம் என்று தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கில் கோவில் தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. ஆவணங்களை என்னிடம் காண்பித்து படித்துக்காட்டினால் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில் உள்ள விவரங்கள் யார் கூறி தயார் செய்தார்கள் என்றால், நான்தான் விவரங்கள் கூறினேன். கோவில் எந்த கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும் கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராமம் சர்வே எண் தெரியாது. கோவில் நிலமானது எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. கோவில் நிலத்திற்கு கிழக்குபுறம் உள்ள நிலத்தின் சர்வே எண் என்ன என்றால், தெரியாது. அதேபோல் கிழக்குபுறத்தில் உள்ள நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால், எனக்கு தெரியாது. கோவிலுக்கு மொத்தம் எத்தனை பங்காளிகள் என்றால், மொத்தம் 22 குடும்பங்கள். அந்த 22 குடும்பங்களும் கோவிலுக்கு வரி செலுத்தி வருகிறார்களா என்றால், ஆமாம். 10 குடும்பங்களுக்கு கோவில் வரியானது தலா ரூ.10,000 என்றும், அதில் 1-ம் பிரதிவாதி ரூ.10,000 கோவில் வரி செலுத்தியுள்ளார் என்றால், சரிதான். சுமார் எத்தனை ஆண்டுகளாக 1-ம் பிரதிவாதி கோவில் வரி செலுத்தவில்லை என்றால், வழக்கு தாக்கல் செய்தததிலிருந்து சுமார் 2 ஆண்டுகளாக வரி

செலுத்தவில்லை. 1-ம் பிரதிவாதியின் தாயார் குட்டியம்மாளை எனக்கு தெரியுமா என்றால், தெரியும். கோவிலுக்கு மேற்கு புறத்தில் குட்டியம்மாளுக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளதா என்றால், உள்ளது. கோவிலுக்கு கிழக்குபுறத்தில் உள்ள நிலம் குட்டியம்மாளின் பெயரில் பட்டா உள்ளது என்றால், இல்லை. என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ.1** ல் சர்வே எண். 384/6 ல் குட்டியம்மாளின் பெயர் உள்ளது என்றால், தெரியாது. சர்வே எண் 384/6 ன் பழைய சர்வே எண் 111/6 என்றும் பழைய சர்வே எண் இருந்தகாலத்திலே குட்டியம்மாளின் பெயர்தான் இருந்தது என்றால், தெரியாது. எனக்கு சொந்த நிலங்கள் மற்றும் வீடு உள்ளதா என்றால், உள்ளது. எனது நிலத்திற்கு பட்டா உள்ளதா என்றால், உள்ளது. பட்டாபடி சொத்துக்கள் எனக்கு சொந்தம் என்றால், சரிதான். பொதுவாக சொத்துக்களுக்கு யார் உரிமையாளரோ அவர்கள் பெயரில்தான் பட்டா வழங்கப்படும் என்றால், சரிதான். உரிமையில்லாத சொத்துக்களுக்கு பட்டா வழங்கப்படுமா என்றால், இல்லை. கோவிலுக்கு கிழக்குபுறமாக உள்ள நிலம் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க ஆவணங்கள் ஏதேனும் நான் பார்த்துள்ளேனா என்றால், இல்லை. சர்வே எண் 384/6 ல் உள்ள காலிநிலம் குட்டியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றும் கோவிலுக்கும் அந்த காலிநிலத்திற்கும் எந்த சம்மந்தமும், உரிமையும், அனுபவமும் இல்லை என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரிக்கையில் கூறியது போல் சர்வே எண் 384/6 ல் திருவிழா சமயங்களில் அன்னதானம், ஆர்கெஸ்ட்ரா, தெருக்கூத்து, கரகாட்டம், நையாண்டி போன்ற நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி கோவில் உள்ள ஈஸ்வரன் சுவாமி சிலைக்கு எதிரில் நந்தி சிலை உள்ளதா என்றால், சரிதான். அந்த நந்தி சிலைக்கு கிழக்கில் காலி நிலம் உள்ளதா என்றால், சரிதான். கோவிலுக்கு கிழக்குப்பக்கம் ஆஸ்பட்டாஸ் கூரை போடப்பட்டுள்ளதா என்றால், சரிதான். சர்வே எண் 384/6 காலிநிலத்தில் மேற்கூரை ஏதும் போடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. சர்வே எண் 384/5 கோவில் நிலம்வரை மேற்கூரை போடப்பட்டுள்ளதா என்றால், சரிதான். நந்தி சிலைக்கு பின்புறமாக உள்ள காலிநிலத்தின் வழியாக இடதுபுறமாக கோவிலை சுற்றி வருவார்கள் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்த பிரமாணப்பத்திரிக்கையில் பத்தி 6 ல் சர்வே எண் 384/6 ல் சாமி ஊர்வலம், சாமி ஆற்றிற்கு போகும் நிகழ்வு காலங்காலமாக

நடைபெற்று வருகிறது காலிநிலத்தினை கோவில் அனைத்து சுப நிகழ்விற்கும் பயன்படுத்தி வருவதாக கூறியுள்ளது போல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றும் அவை அனைத்தும் பொய்யான சங்கதிகள் என்றால், சரியல்ல. என்னுடைய பிரமாணப் பத்திரிக்கையில் சர்வே எண் 384/6 ல் அத்துமீறி நுழைந்தார்கள் என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றும் யார் அத்துமீறி நுழைந்தார்கள் என்றால், சரியல்ல நான் அப்படி என் பிரமாணப் பத்திரிக்கையில் நான் குறிப்பிடவில்லை. பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்து தகராறு செய்தது சம்மந்தமாக சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் புகார் அளித்தோமா என்றால், நாங்கள் கொடுக்கவில்லை 1-ம் பிரதிவாதி மகேஸ்வரிதான் புகார் கொடுத்தார். சர்வே எண் 384/6 குட்டியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றும் அவருடைய வாரிசான 1-ம் பிரதிவாதி மகேஸ்வரியின் அனுபவத்தை கோவில் தரப்பினர் இடைஞ்சல் செய்ததால் 1-ம் பிரதிவாதி மகேஸ்வரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால், சரியல்ல. சர்வே எண் 384/6 கோவிலுக்கு உரிமை மற்றும் அனுபவம் இல்லாததால் தான் அரசாங்கம் கோவிலுக்கு பட்டா வழங்கவில்லை என்றால், சரியல்ல. சர்வே எண் 384/6 எந்த காலத்திலும் கோவிலின் அனுபவத்தில் இல்லை என்றும் குட்டியம்மாளின் இறப்பிற்கு பிறகு அவருடைய வாரிசான 1-ம் பிரதிவாதி மகேஸ்வரிக்குப் பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. தற்போது 3 பங்காளிகள் பிரிந்து அவர்களே தனியாக கோவில் கட்டிக்கொண்டார்கள் என்றும் அவர்கள் தற்போது இந்த கோவிலுக்கு வருவதில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரிக்கையில் உள்ள விவரங்கள் அனைத்தும் வாதி அருண்குமார் சொல்லி அதனை டைப் செய்து அதில் நான் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால், சரியல்ல. எனக்கு கோவிலுக்கு சம்மந்தமான ஆவணங்களைப் பற்றியும் குட்டியம்மாளுக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களைப் பற்றியும் விவரங்கள் அனைத்தும் தெரிந்தும் வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் ஆவணங்களைப் பற்றிய விவரங்களை நான் இந்த வழக்கில் கூறமறுக்கிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் சர்வே எண் 384/5 ல் உள்ள கோவிலின் வழிப்பாடுகளை என்றும் தடுத்ததில்லை என்றால், சரியல்ல. வாதி அருண்குமார் கேட்டுக்கொண்டதன் பெயரில் இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள கூடியதல்ல என்றால்,

சரியல்ல. வாதி அருண்குமார் கோவிலின் தர்மகர்த்தா இல்லை என்றால், சரியல்ல. குட்டியம்மாக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாதி அருண்குமார் அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12:50

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.10.09 14:27:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.